ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 5 சதம் REGD. NO. 4642

# திராவிடநாடு

மலர் 11. | 10—8—52 | இதழ் 6.

# தி. மு. க. கிளை செயற்குழு தேர்தல்

## 17—8—52 ஞாயிற்றுக்கிழமை

## பொதுச் செயலாளர் அறிவிப்பு

### தேர்தல் விதிகளும் முறைகளும்

தி. மு. க. சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர்—நகர கிளைக்கழக உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 17—8—52 ஞாயிற்றுக்கிழமையை தேர்தல் நாளாக நிர்ணயித்திருக்கிறேன்.

நகரக் கிளைக்கு உட்பட்ட வட்டாரக் கிளைகள் ஒருநாள் முன்னதாகத் தங்கள் தேர்தலை நடத்திக் கொள்ளலாம்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் அல்லது புதிதாகத் துவங்கியிருந்தாலும், அப்படிப்பட்ட கிளைக் கழகங்களும் 17—8—52ல்கூடி செயற்குழுவை உறுதிசெய்துகொண்டு, மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

தேர்தல் முடிவுகள் 20—8—52க்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

தேர்தலின் முடிவைப் பெற்றுக்கொண்டு தான் அந்தந்தக் கிளைக்கழகம் தலைமை நிலையத்தில் பதிவு செய்யப்படும்.

17—8—52ல் தேர்தல் நடத்தும் கிளைக் கழகம்மட்டுமே மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும்.

17—8—52ல் கிளைக்கழகத் தேர்தல் நடத்தப்படவேண்டிய மாவட்டங்கள்.

| | |
|---|---|
| சென்னை | திருச்சி |
| சேலம் | மதுரை |
| கோவை | இராமநாதபுரம் |
| தஞ்சை | திருநெல்வேலி. |

கேரள ஆந்திர கர்நாடகப் பகுதிகள்.

தேர்தலில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகள்:

1 ஒவ்வொரு கிராமத்திலும் 25 உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.

2 (அ) நகராண்மைக் கழகம் உள்ள ஒவ்வொரு நகரத்துக்கும் (Municipal Town) நகரக் குழு அமைத்துக்கொள்ளலாம்.

(ஆ) இருபத்தைந்துக்குக் குறையாத உறுப்பினர்களுள்ள ஒவ்வொரு நகர வட்டாரமும் (Municipal ward) வட்டாரக்குழு அமைத்துக் கொள்ளலாம்.

(இ) வட்டாரக் குழுக்கள் நகரக்குழுவுக்கு இரண்டு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

3 சென்னையிலுள்ள ஒவ்வொரு வட்டாரமும் (Municipal ward) கிளைக்கழகங்கள் அமைத்துக்கொள்ளவேண்டும்.

4 ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

5 சிற்றூர்க்கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டாரக்கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக்கிளை அந்த நகரமக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும், அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

6 செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும் 21 பேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

7 (அ) தேர்தல், கிளைக்கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்படவேண்டும்.

(ஆ) செயலாளரே போட்டியிடுபவராக இருந்தாலும் பொது உறுப்பினர் கூட்டம் தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

8 தேர்தல் நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு கழக உறுப்பினரனைவரும் அறியும் வகையில் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்டவும்.

"அறிவகம்"
ராயபுரம், சென்னை.

அண்ணாதுரை,
பொதுச் செயலாளர்.

# தலைமை நிலைய பொறுப்பாளர்

## நன்றியும்—வரவேற்பும்

நமது கழகத் தலைமைக் காரியாலயம், கிளைக் கழகங்களுடன் தக்க விதமாகத் தொடர்பு வைத்துக்கொண்டு, அவ்வப்போது கழகம் இயங்கும் நிலைமையைக் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனும், கழக உறுப்பினர்கள் சேர்ப்பதிலே காணப்பட்ட சோர்வைத் துடைத்து, ஊக்கமூட்டி உறுப்பினர்களை ஏராளமாகச் சேர்ப்பதற்கு உறுதுணையாக, தூண்டுகோலாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டும் தலைமைக் காரியாலயத்திலே, கழகத் தோழர்கள் பொறுப்பாளராக இருந்து குறைந்தது மூன்று திங்களுக்காவது பணியாற்றவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன்.

தி. மு. கழகம் ஒரு உன்னதமான இலட்சியத்துக்காகப் பாடுபடும் அமைப்பு; இதனிடம் பற்று கொண்டோர் மிக ஏராளமாக உள்ளனர்—சிற்றூர்களிலேயும். எனினும் ஆர்வம் கொண்டவர்களை எல்லாம் உறுப்பினர்களாக்கி, நல்ல அமைப்பு முறையுடன் காரியமாற்றினால்தான், நாட்டிலே தி. மு. கழகம் மெச்சத்தக்க நிலையையும், பாராட்டத்தக்க பணியையும் ஏற்கும் வலிவு கிடைக்கும். தி. மு. கழகம், மிகுந்த ஆலோசனைக்குப் பிறகு தீட்டப்பட்ட, சட்ட திட்டத்தைக் கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்ப அமைப்பு இருக்கவேண்டும். இந்த அமைப்பை ஏற்படுத்த, தலைமைக் காரியாலயத்திலே கழகத் தோழர் இருந்து பொறுப்பாளராகப் பணியாற்றினால்தான், வெற்றி கிட்டும் என்ற எண்ணத்துடன், நான் வேண்டிக் கொண்டதும், தோழர் E. V. K. சம்பத் என் வேண்டுகோளின்படி கடந்த 3-திங்களாக, தலைமை நிலையப் பொறுப்பாளராக இருந்து வருவதும் அனைவரும் அறிந்ததே.

உறுப்பினர்கள் சீட்டுகள் பலப்பல ஊர்களிலே சிதறிக்கிடந்தன. எந்த ஊரில் எவ்வளவு உறுப்பினர் சேர்ந்தனர், மிகுதியுள்ள சீட்டுகள் எங்கே, என்பது சிக்கலாகவே இருந்தது. ஆயிரமாயிரம் உறுப்பினர்களைச் சேர்த்துவிட முடியும் என்று வாக்குறுதி தந்தவர்களிலே சிலர், கடிதங்களுக்குப் பதிலே போடாது இருந்தனர். இந்த நிலை, உண்மையாகவே என் மனதுக்கு ஆயாசத்தைத் தந்தது. மூன்று திங்களாகத் தலைமைக் கழகத்தில் பொறுப்பாளராக தோழர் சம்பத் இருந்து திறம்படப் பணியாற்றியதால், என் ஆயாசம் ஓரளவு மறைந்தது — நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பிறந்தது, அன்றாடம் தலைமைக் காரியாலயத்தில் இருந்துகொண்டு மனச்சோர்வூட்டக் கூடியவிதமான கடிதங்கள் வந்தாலும், சோர்வு கொள்ளாது, பிறருடைய சோர்வுகளையும் துடைத்து, கிளைக் கழகங்களைத் தூண்டித் தூண்டி உறுப்பினர்களைச் சேர்க்குமாறு செய்து, நான் பாராட்டக் கூடிய விதமாகத் தமது பணியினை, திங்களொன்றுக்கு இருநூறு ரூபாய்க்கு மேலாகவே சொந்தப் பணத்தைச் செலவிட்டுக்கொண்டு சென்னையில் தங்கியிருந்து பணியாற்றிவந்த தோழர் சம்பத்துக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த கட்டம் ஆரம்பமாகிறது. கிளைக் கழகத் தேர்தல்கள் நடைபெறவேண்டும்—மாவட்டக் கமிட்டிகள் அமையவேண்டும்—புதிய பொதுக்குழு காணவேண்டும். அப்போதுதான் தி. மு. கழகம் பொலிவும் வலிவும் பெற்றுத் திகழும். இந்தக் கட்டத்திலே காரியமாற்ற, தோழர் இரா. நெடுஞ்செழியனைக் கேட்டுக்கொண்டேன். அவர் ஆகஸ்ட் 8-ந்தேதியிலிருந்து, தலைமை நிலையப் பொறுப்பாளராக இருந்து மூன்று திங்கள் பணியாற்றி வருவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூன்று திங்களில், கழகத்தின் அமைப்பு நாமெல்லாம் மகிழத்தக்க விதமானதாகும்படி பணிபுரியும்படி தோழர் நெடுஞ்செழியனைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போது அவர் தலைமை நிலையப் பொறுப்பாளராக அமர்ந்திருக்கிறார்.

சோர்வும் சிக்கலும் மிகுந்திருந்த நேரத்தில், பொறுப்பாளராக இருந்து பணியாற்றி, கழகத்துக்கு உற்சாகமூட்டி, என் ஆயாசத்தைப் போக்கிப் பணியாற்றிய தோழர் சம்பத்துக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொண்டு, தி. மு. கழகத்தின் அமைப்பு முயற்சியின் இரண்டாவது கட்டத்தை நடத்தித்தர முன்வந்திருக்கும் நண்பர் நெடுஞ்செழியனை வரவேற்கிறேன்.

அவருடைய பணி வெற்றிகரமாகும்படி தி. மு. கழகத் தோழர்கள் ஆர்வத்துடன் ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்
அண்ணாதுரை

திராவிடநாடு

காஞ்சி] 10—8—52 [ஞாயிறு

# மித்திரனின் சித்திரம்

★

கறவை மாடு ஒன்று!
ஒருவர். தீனி வைத்துக்கோண்டிருக்கிறார்!!

ஆனால், பாலைக் கறப்பதோ வேறு சிலர்!!

இவ்விதம், 7-ந்தேதிய "சுதேசமித்திரன்" இதழ் பிரசுரித்துள்ள சித்திரம் ஒன்றும், அதை விவரித்து தரப்பட்டுள்ள சிறியதொரு விளக்கமும் நம் சிந்தையைக் கவர்ந்தது. 'மித்திரன்', நுணுக்கங்களை, நாம் நன்கு அறிவோமாதலால் அதன் சித்திரமும் விளக்கமும் மிகமிகத் திகைப்பைத் தந்தது. சித்திரத்துக்கு அது தந்திருக்கும் விளக்கம், இது.

- கறவைமாடு—தென்னிந்தியா
  தீனிவைப்பது—ஆச்சாரியார்
  பாலைக் கறப்போர்—வடஇந்திய வர்த்தகர்கள்.

இதனைப் பிரசுரிப்பது திருவக்தாதி பாடிடும் ஏடு—திகைப்பும் சிந்தனையும் அதிகரிக்காமலா இருக்கமுடியும்? காணுக காட்சியாயிற்றே, இது! வடநாட்டினர் தென்னிந்தியாவெனும் பசுவைக் கறக்கிறார்கள்! அதுவும் எப்படி? தீனிவைத்து ஒருவன் போஷிக்க, 'திருட்டுத்தனமாக' பாலைக் கொள்ளையிடுகிறார்கள் இதைப் படமாக வரைந்து தருகிறது, மித்திரன்! அதோடு விட்டுவிடவில்லை. "இந்தச் சித்திரம் எதற்காகப் போட்டோம் தெரியுமா? எமது ராஜாஜி இவ்விதம் பேசியிருக்கிறார்" என்று நமக்கெல்லாம் கூறுகிறது—திகைப்புக்குமேல் திகைப்பு!

"வட இந்தியர் நமது செல்வத்தைப் பறித்துக்கொண்டு போவதாக எனது நண்பர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கூறுகிறார் அது உண்மை தானேவென்று எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் இங்குவந்து வியாபாரம்செய்து பணம் திரட்டுகின்றனர்- ஆனல் நமக்கு அவர்களுடைய உதவி தேவைபாயிருக்கும்போது அவர்கள் நம்முடன் ஒத்துழைப்பதில்லை"

கூறியது, ஆச்சாரியார்! அதனை கட்டம்கட்டி, பிரமாதமாகப் பிரசுரிக்கிறது—மித்திரன்!! தென்னிந்திய வர்த்தக சபையினரின் ஆண்டு விழாக் கூட்டத்தில், பேசிய ஆச்சாரியார், வடநாட்டு அதிபர்களைக் குறித்து, இவ்விதம் வெளியிட்டிருக்கிறார். ஒத்துழைக்கவில்லை!!—இவ்விதம், கூறவில்லை அவர். ஒத்துழைப்பதில்லை!! — இப்படிக் கூறுகிறார். இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் வெவ்வேறு பொருளைக் காணலாம். "ஒத்துழைக்கவில்லை" என்றால், ஆச்சாரியார் ஆட்சி நன்கு நடைபெறுவதில் வடநாட்டதிபர்கள் கவலை கொள்ளவில்லைபோலும் அதனால் ஆயாசப் பட்டு 'ஒத்துழைக்கவில்லை சர்க்காருடன்' எனக் கூறுகிறார் என்று கருதலாம். ஆனல் அவர் அப்படிக் கூறவில்லை. ஒத்துழைப்பதில்லை!! — என்கிறார். அப்படிச் சொன்னதாக 'மித்திரன்' வெளியிட்டிருக்கிறது.

அன்பர் ஆச்சாரியார் அவர்கள் இதுபோது கூறும் இதனைத்தான், நாம் அடிக்கடி காட்டி வருகிறோம்.

ஆனல், அதனை இன்று வெளியிடுகிறார்—அவர். "ஒத்துழைப்பதில்லை";—இதனல், வடநாட்டு அதிபர்களின் போக்கை, நீண்ட நாட்களாகவே, கவனித்து வந்திருக்கவேண்டும் அவர். ஆனல்; இதுவரை, அதை வெளியிடவில்லை. பிரச்னை, தன்னைக் கடித்ததும், 'பார்! பார்! உண்மைதான்போலும்' என்று, நொந்த மனதோடு கூறுகிறார். 'தமது சுரண்டலே பிரதானம்' என்று இந்த உலவும் வடநாட்டுப் பணக்காரர்களைப்பற்றி இவ்விதம் பேசச்செய்தது, வேறெதுவுமல்ல ஆச்சாரியார் ஐந்து கோடி கடன் கேட்டார், சர்க்கார் சார்பில் மக்களை—அதாவது பணக்காரர்களைப்—பார்த்து கடன் கேட்டது, சென்னை அரசாங்கம். சில பணக்காரர்களும், பாங்கிகளும், கம்பெனிகளும் தந்தன—ஆனல், வடநாட்டாரால் நடத்தப்படும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் பேசாது இருந்துவிட்டனவாம்! "பணத்தோட்டம்" என்று கூறத்தக்க அளவில் இப்போதிருப்பவை, பாங்கிகளும், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளுந்தானே! இவைகளில்தானே, சேமிக்கப்படும் தொகை கோடிக்கணக்கில் புரள்கிறது. புரளும் கோடிகளில் சில லட்சங்களைத் தரவும்—இனமாக அல்ல! கடனுக!!—வடநாட்டினர் ஆதிக்கத்திலுள்ளவை, இசையவில்லையாம். இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளும், பாங்கிகளுமான "பணத்தோட்டம்" வடநாட்டவர் ஆதிக்கத்தில் தானே, இருக்கிறது!

இந்தப் பணத் தோட்டத்திலிருந்து ஒரு சிறுபழம் கூட கிடைக்கவில்லை 'பசி! பசி!!' எனக்கதறிய அன்பர் ஆச்சாரியாருக்கு. எனவே, உண்மை விளக்கம் — ஆத்திரத்தின் விளைவால் உதடுகளைத் தாண்டி ஓடி வந்திருக்கிறது!! அதை, அவர், தென் இந்திய வர்த்தக சபையில் எப்படி வெளியிட்டிருக்கிறார் தெரியுமா?

"சென்னை மாகாணத்திலிருந்து ஆறுகோடி ரூபாய் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளுக்கென்று ஒவ்வொரு வருடமும் போகிறது. இந்த ஆறு கோடியும் நமது மக்களிடமிருந்துதான் செல்கிறது இவைகளைப் பெறும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் மிகப் பெரும்பாலானவை மாகாணத்துக்கு வெளியில் இருப்பவைதான் (Mostly out side Companies) ஆனல நாட்டின் முக்கிய தேவைகளான அணைக்கட்டு, மின்சாரம் ஆகிய திட்டங்களுக்கான பணத்துக்கோ நான் மிகவும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. இந்தக் கம்பெனிகளைப் பார்த்து நான் கடன் கேட்கும்போது அவைகளை நான் ஒன்றும் தர்மம் கேட்கவில்லை. 'எனது மக்கள் உனனிடம்சேர்த்து வைத்திருப்பதைக் கொடேன்' என்றுதான் கேட்கிறேன்"

ஆத்திரமும் சோகமும் தென்படுகிறது. இந்த வார்த்தைகளில். அதனாலேயே 'மித்திரனும் மேற்படி படத்தைப் போட்டுக் காட்டுகிறது! இன்று ஆச்சாரியார், 'பணமில்லாத தால' கதறும் காட்சியினைத்தான், நாம் அடிக்கடி சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். 'வடநாட்டு வாணிப முதலைகளின் நோக்கம் சுரண்டுவதுதான்! அவர்களுக்கு நமது நாட்டைப்பற்றிக்கவலை சிறிதும் இல்லை!!' என்று நாம் கூறியபோதெல்லாம், மிரட்டியும் உருட்டு விழியைக்காட்டியும் சீறினரே அவர்கள் இப்போதென்ன கூறமுடியும்? அவர்கள் போற்றித்துதிக்கும் ஆச்சாரியார் கூறுகிறார்! வடநாட்டு வாணிபஅதிபர்களுக்கு நமது மக்கள் நலனில் அக்கரையில்லை, என ஆவேசத்தோடு கூறுகிறார்!! பணநெருக்கடியால் தாக்குண்டு, திகைத்து, செய்வகை தெரியாது விழித்து, கடன் கேட்டு, களைப்புற்று, திண்டாடிய பின் தெரிவிக்கிறார் இதனை — அதுவும் எவ்விதம்? வடநாட்டுக்காரர்கள் நம்முடன் ஒத்துழைப்பதில்லை! — என்று. எப்போதும் அவர்கள் ஒத்துழைப்பதில்லை என்று தெரிவிக்கிறார். அதோடு நின்றுவிடவில்லை, அன்பர் ஆச்சாரியார். வடநாட்டு வணிகர்களின் கெடுமதியைச் சுட்டிக்காட்டியதோடு இருந்து விடவில்லை. 'டில்லி' சர்க்காரைப்பற்றியும், சில முத்துக்களைச் சிந்தியுள்ளார் — அதனை வைத்து 'இந்து' இதழும் தலையங்கம் எழுதியுள்ளது. ஆனல் அது அத்தனையும்,இத்தனை நாட்களாக நாம் கூவிவந்ததுதான். காட்டுக்கூச்சல் என்றனர் நமது கனவான்கள்! இன்று சித்திரமும் தலையங்கமும் தீட்டப்படுகிறது!! 'டில்லி' சர்க்காரைப்பார்த்து, ஆச்சாரியார் கோருகிறார்.

"நாங்கள் செலுத்தும் வருமான வரியில் அதிகப்பங்கு வேண்டும்.

கலால் வரியில் பங்குதரவேண்டும்.

இவைகளைத் தருவது மட்டுமல்ல, சுங்க வரியைச் சுரண்டிக் கொண்டே போகிறீர்கள். 80 கோடி டில்லி குப்போகிறது. இதிலே பங்கில்லை என்று அரசியலமைப்பு கூறுகிறது.

நாங்கள் ஏற்றுமதி செய்யும் பொருள்கள் மூலம் கிடைக்கும் வரியில் எங்களுக்கும் பங்கு வேண்டும்."

கேட்பது ஆச்சாரியார்! நாமல்ல! ஆச்சாரியார் இந்தக்கருத்தை வெளியிடுமுன், தென்னிந்திய வர்த்தக சபையின் தலைவராகயிருக்கும் — இருந்துவருபவர்! — செட்டிநாட்டுச் சீமான் M. A. சிதம்பரம் இந்தவரிப் பிரசனை குறித்து கொஞ்சம் காரசாரமாகப் பேசியிருக்கிறார். இந்த 'சில்லரை' விஷயங்களில் இதுவரை கவனம் செலுத்தாத 'பிரபுக்கள் பீடம்' இப்போது கதறியிருக்கிறது காரணம், நமது முரசொலி காதைக் குடைந்ததாலா அல்லது வடக்கின் சூடு இப்போதுதான் உரைத்ததாலா என்பதைக் கவனிக்குமுன், அந்தச்சீமான் பேசியதன்,கருத்தை உங்கள் பார்வைக்கு வைக்கிறோம். சில்லரையென்று கருதப்பட்டனவே, முன்பு! இப்போது பாரீர்!!

"சென்னை வளமுள்ளது—ஆனல் தொழில் துறையில் முன்னேறவில்லை. நாம், மத்திய சர்க்காரிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கவில்லை. தெற்கில் ஒரு இரும்புத் தொழிற்சாலை உள்ளதா? தெற்கில்எவ்வளவு இரும்புச்சுரங்கங்கள்உள்ளன! எண்ணெய் பரிசோதனைச் சாலை ஒன்று ஏற்படுத்தக்கோருகிறோம் இன்னும் பதிலில்லை. விஞ்ஞான ஆராய்ச்சி சாலை எதுவும் தெற்கில் இல்லை. நமது துறைமுகவளம் குறித்து, மத்தியசர்க்கார் சிறிதும் சிந்தித்தாரில்லை. இரும்பும், மாங்கனீசும், லிக்னைட்டும், நமது பூமியில்ஏராளமாக இருக்கிறது. ஆனல் அதைத் தோண்ட சிரத்தைகொள்ளவில்லை. மத்திய சர்க்கார் பாரபட்சத்தோடு நடக்கிறது. நாம் பின்தங்கிக் கிடக்கிறோம்."

தெற்கு பாலைவனமாக இருப்பது குறித்து அவர் பேசியிருக்கிறார். அவர் பேசியதிலுள்ள நோக்கம் எதுவாயினும் இருக்கலாம்! ஆனல், அவர் கூற்று அத்தனையும் உண்மை தானே!! — அவர், வர்த்தகசபையின் தலைவர். லாபக்கழுகு. ஆனல் அவரது கூற்றிலுள்ள உண்மை — நமது பூமியிலிருந்து விளைந்துசெல்லும் பொருள்களுக்கு சுங்கவரி போட்டு, அதன்மூலம் கோடிக் கணக்கில் பணம் குவிக்கிறதே டில்லி!! இதை எவரே, மறுக்கமுடியும். நாம் கூறினல், சீறினர்! இப்போது 'காங்கிரசுக்கு' மோகினியாக விளங்குவோர் செப்புகிறார்கள்,

கோடிக்கணக்கில் கொட்டிச் செல்கிறது டில்லி.

கொடுப்பதில்லை எதுவும்.
தெற்கு தேய்கிறது.

என்பதாக. வர்த்தகசபையின் தலைவர் கூற, 'ஆம்' என்று ஆவேசத்தோடு ஆச்சாரியார் தேசிய இதழ்கள் ஆமோதித்து எழுதுகின்றன! அன்பர் ஆசசாரியார் அவர்கள், வர்த்தக சபைத் தலைவரின் வார்த்தைகளைக்கேட்டபிறகு, முதலமைச்சர் என்கிற முறையில் இன்னும் சில உண்மைகளை வெளியிடுகிறார்—புத்திமதிகள் கூறுவதுபோல. அவை, மக்களைப்பார்த்து அல்ல கூறியது—வர்த்தகர்களுக்கு.

"வர்த்தக சபையினர் தாமிருக்கும் ராஜ்யங்களைப்பற்றி கவலை கொள்ள வேண்டும். அப்படியிருந்தால், 'மாகாண சர்க்காருக்கு ஏதாவது கிடைக்க முடியும்"

"வரிகளிலிருந்து தப்ப நினைக்கிறார்கள். அதனல் தொலைவிலேஇருக்கும் மத்திய சர்க்காருடனே நமது விவகாரம் இருக்கட்டும் என்றுஎண்ணுகிறார்கள்"

"அதனாலேயே அவர்கள் மத்திய சர்க்காரைப்பற்றியே சிரத்தை கொள்கிறார்கள்"

"அருகிலிருக்கும் மாகாண சர்க்காரின் கட்டுப்பாட்டிலிருந்தால், தப்பமுடியாதல்லவா? அதனல் தொலைவிலிருப்பதும், எவ்வளவோ காரியங்களைக் கவனிக்க வேண்டிய நிலையிலிருப்பதுமானமத்தியசர்க்காருக்கே கட்டுப்பட விரும்புகிறார்கள்!"

"இது நியாயமல்ல. ராஜ்ய வருமானத்துக்கு உதவுங்கள். ராஜ்யத்துக்காக பாடுபடுங்கள்" தென்னிந்திய வர்த்தகர்களைப் பார்த்து செப்பியுள்ளார் இதனை. என்ன பொருள் இதற்கு?

இங்குள்ள வர்த்தகர்கள் மாகாண சர்க்காருக்கு கட்டுப்படாமல் தப்புகிறார்கள்.

காரணம், மத்திய சர்க்காரைச் சுலபத்தில் ஏமாற்ற முடியும்.

ஏனெனில் — அது தொலைவிலிருக்கிறது. பெரிய உப கண்டத்தையே கண்காணிக்க வேண்டியிருக்கிறது.

இது தானே, ஆச்சாரியார் கூற்று, தெரிவிக்கிறது நமக்கு! மாகாண சர்க்காரின் பொறுப்பில், வர்த்தகர்களின் வருமான வரியும், சுங்க வரியும் இருக்குமேயானல் எளிதில் தப்ப முடியாதென்கிறாரே, அவர். அப்படியானல் லாபவேட்டைக்காரர்களின் பணம் எவ்வளவு குவியும் சர்க்கார் பொக்கிஷத்தில்!—இதனை, எண்ணிப்பார்க்கக் கோருகிறோம். பிரிவினை யென்றால் சீறுவோரை, பெரிய வர்த்தகர்கள் ஏமாற்றுகிறார்கள்.

அதனல் வருமானம் நஷ்டம்.
டில்லி—வரிகளைக்கொண்டு செல்கின்றது.

வருமான நஷ்டம்.
வடநாட்டு கம்பெனிகள் சுரண்டுகின்றன.

நமக்கு உதவுவதில்லை.
டில்லி பீடம்—பாரபட்சம் காட்டுகிறது, தெற்கு தேய்கிறது.

இத்தனையையும் தாங்கிக் கொண்டு ஏன், நாம் அவதியுற வேண்டும்? நம்மை நாமே, பாதுகாத்துக் கொள்ளும் நிலை பெற்றால, கோடிக்கணக்கில வருமானம் புரளும்! நமது சர்க்காரும் தாம் நினைத்ததைச் செய்யமுடியுமே! இருந்தும் ஏன், நாம் வளமிழந்து வாழ்விழந்து வதைபட வேண்டும்? முன்னாள் நிதியமைச்சர் கோபாலரெட்டி கூறினர்—சீதாராமரெட்டி செப்பினர் — ஓமந்தூரார் அண்மையில்கூட சென்னை மேல்சபையில பேசினர். அத்தனைபேரும், சர்க்காரிலிருந்தபோது, கண்ட சஞ்சலத்தால், உண்மையை உரைத்தனர்—"மத்தியசர்க்கார் மாகாணங்களை மதிப்பதில்லை"

(6-ம் பக்கம் பார்க்க)

# டில்லி பீடமே—உன் திமிர் நீடிக்காது!

# புற்றீசல் எனக் கிளம்பிய புலிகள்

## காண்பாய் எமது மூலபலம்

ஆகஸ்டு அறப்போரில் பங்கு கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத் தீரர்களின் பட்டியல் ஏராளமாக வந்திருக்கிறது. அதைக் காணும்போது பிரமிப்பாயிருக்கிறது! புற்றீசல்போலப் புறப்பட்டிருக்கின்றனர்—நமது புலிநிகர் வீரர்கள். ஒவ்வொரு ஊரிலும் 31-ந் தேதிக்கு முன்பே தமது பெயர்களைப்போட்டு துண்டுஅறிக்கைகள் மூலம், முன்னறிவிப்பு செய்துவிட்டே, அறப்போரில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்தப்படை, நமது மூலபலம்! எந்நேரமும் தயாரிலிருக்கும் இலட்சிய சிம்மங்கள் இவர்கள்!! "டில்லி பீடமே—காண்பாய் எமது காளையர் தம்மை!" என்ற எச்சரிக்கைதானே இது. (ஆர்.)

நஞ்சை

அறப்போரில் கலந்து கொண்டு ரயில்வே நிலையத்திலிருந்த இந்தி எழுத்துக்களையும், கலெக்டரேட் போஸ்டாபீஸ், கிழக்கு போஸ்டாபீஸ் இந்தி எழுத்துக்களையும் அழித்தனர். ஏராளமான பொதுமக்கள் அறப்போரைக் கண்டனர். அறப்போரில் ஈடுபட்ட தி. மு. க. தோழர்கள்.

எ. கே. வேலன்
என். எஸ். இளங்கோ
எ. வி. பதி
கே. ஜி. ராசன்
டி. சோமு
டி. எஸ். பஞ்சாபகேசன்
டி. எஸ். ராமதாஸ்
கே. கணேசன்
பட்டு
குருசாமி
வேலு
சிங்காரம்
தயாளன்
சமரசபண்டியன்
சின்னப்பா
தர்மலிங்கம்

சோழவந்தான்

இவ்வூரிலுள்ள அஞ்சல் நிலையத்திலுள்ள இந்தி எழுத்துக்களையும் தூத்துக்குடி செல்லும் தரிதவண்டியிலுள்ள இந்தி எழுத்துக்களையும் அழித்த தி. மு. க. அறப்போர் வீரர்கள்:

தா. ஆவுடையப்பன்
டி. வி. நாராயணசாமி
எஸ். செல்வத்துரை
சி. மா. வேலன்
பி. ராமய்யா
கே. முனியாண்டி
பி. மணிவேல்

### அனுதாபம்

நடிகநண்பர்களான எம்.ஜி. சக்கரபாணி, எம். ஜி. ராமச்சந்திரன் ஆகியோரது அருமைத்தாயார் கடந்த 5–8–52 மாலை சென்னையில் தமது 72–வது வயதில் காலமானார்கள். இரவு 8 மணிக்கு சவ அடக்கம் நடைபெற்றது. திரைப்பட உலக முக்கியஸ்தர்களும் நண்பர்களும் கலந்து கொண்டார்கள். அருமைத் தாயாரை இழந்து தவிக்கும் நண்பர்களுக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோயம்புத்தூர்

ரயில்வே நிலையத்திலுள்ள இந்தி எழுத்துக்களையும், அஞ்சல் நிலையங்களிலிருந்த இந்தி எழுத்துக்களையும் அழித்தார்கள். அதில் கலந்து கொண்ட தோழர்கள்:

ஈ. வி. கே. சம்பத்
கே. ஆர். ராமசாமி
வே. ஆ. கரிகாலன்
மு. வெங்கிடேசன்
எஸ். முத்தையா
ஆர். எஸ். மணியம்
சி. ஆர். ராசகோபாலன்
சி. ஆர். நடராசன்
சி. குப்புசாமி
ர. வெள்ளிங்கிரி
மலையாண்டி
அ. பழனிசாமி
மு. மா. சண்முகசுந்தரம்
பஞ்ச பூபாலசுந்தரம்
எஸ். எ. இராசமாணிக்கம்
எஸ். ஜோசப்
எம். அனீபா
கே. எ. ராமசாமி
எ. ஆரோக்கியசாமி
எஸ். துரை
எம். அந்தோணிசாமி
என். சிவன்
சி. சுப்பிரமணியன்
கே. பழனியப்பன்
நாகப்பன்
கே. செல்லக்கனி
எஸ். பி. ஆரோக்கியசாமி

## இலங்கை செல்ல ஏன் தடை?

### தி. மு. க. பற்றி கேள்வி

### டில்லியில் நமது பேபி

இலங்கை செல்ல நமது தோழர்களுக்கு காங்கிரஸ் அரசாங்கம் அனுமதி மறுத்ததை யொட்டி நமது தோழர் பேபி கந்தசாமி அவர்கள், டில்லி பார்லிமெண்டில் பின்வரும் கேள்வியை வெளிநாட்டிலாகா பொறுப்பாளரான பண்டித நேருவைக் கேட்டார்:

"சென்னை மாகாணத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் இலங்கைக்குச் செல்ல அனுமதி கோரி விண்ணப்பம் அனுப்பினார்களா?"

"அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதா?"

"அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன?"

இதற்கு பண்டித நேருவின் சார்பில்,

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் யாரும் இலங்கை செல்லவேண்டுமெனக் கோரி விண்ணப்பம் செய்யவில்லை"

என்று பதில் அளிக்கப்பட்டது! விண்ணப்பம் செய்யவில்லையாம் நாம்!!

பி. எஸ். சீனிவாசன்
கோ. கு. இளமதி
க. அருண்மொழி
எஸ். பாலரங்கய்யன்
ரா. கோதண்டராமன்
சி. பி. அர்ஜுனன்
சி. ஆர். முத்துசாமி
சி. என். நடராசன்
அ. சு. மணி
கு. கந்தசாமி
வி. சுப்பிரமணி
கே. பழனிசாமி
குமாரசாமி
பி. கே. பெருமாள்
நா. சுப்பிரமணியம்
கே. மருதாசலம்
என். ராமசந்திரன்
எஸ். உன்னிகிருஷ்ணன்
ம. குமாரசாமி
சி. பி. கந்தசாமி
சி. கே. சண்முகம்
ர. குருநாதன்
இராம. முத்துக்குமரன்
எ. பட்டுசாமி
எம். பழனிசாமி
கி. வே. முத்து
டி. எ. நாராயணசாமி
எ. தாசன்
வே. கிருஷ்ணமூர்த்தி
எஸ். டி. சிதம்பரம்
அ. சங்கரய்யா
சி. என். திழிவேங்கடம்
எ. எஸ். இராமச்சந்திரன்
ஆ. கந்தசாமி
சி. எம். அனீபா
சி. எஸ். சின்னதுரை
பரசுராம கிராமணி
எஸ். டி. பட்டாபிராமன்
சு. ஆறுமுகம்
வி. தனக்கோட்டி
கே. அங்கையன்

மா. கருப்புசாமி
பி. காகராசன்
வீரே கவுண்டன்
என். கணபதி
கே. முனியப்பன்
எம். கருப்புசாமி
பி. கே. நாகப்பன்
கே. வணங்காமுடி
மா. கருப்பண்ணன்
ஆர். ஆதிசிவம்
எஸ். கே. மருதாசலம்
காளிமுத்து
கோவை செழியன்
சி. எம். மாணிக்கம்
அ. சு. இளங்கோ
கி. ந. கதிர்ஒளி
சி. என். மாஸ்தி
வி. எஸ். தனக்கோடி
எஸ். ஆர். பழனிசாமி
எல். ராஜு
எ. சி. ராமசாமி
ஆர். கிருஷ்ணன்
பி. எஸ். வாசன்
சி. கே. வாசுதேவன்
மருதண்ணன்
இரா. வெ. கிரி

இன்னும் பல தோழர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

மதுரை

மதுரை சந்திப்பு ரயில்வே நிலைய போர்டிலிருந்த இந்திப் பெயர்களையும், பொன்னகரம் அஞ்சல் நிலையம், தல்லாகுளம் அஞ்சல் நிலையம், மதுரைத் தலைமைத் தந்தி நிலையம் ஆகிய இடங்களிலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்தனர். பல்லாயிரக் கணக்கான பொதுமக்களும் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள்:

இரா. நெடுஞ்செழியன்
அ. பொன்னம்பலனார்
எஸ். வி. தொந்தி
எஸ். முத்து
எம். அய்யாசாமி
கே. எஸ். ராசமான்
பி. கே. சேதுராமன்
செல்லமாணிக்கம்
பாண்டிஅரசு
மதுசரா
இ. பி. சி. யாகூப்
மா. கா. மைதீன்
சி. எம். தீன்
ஜி. ஆறுமுகம்

பசுமலை

இ. எ. காதன்
எம். கே. முனுசாமி
எம். மாணிக்கம்
சு. இரத்தினம்
எ. கஜேந்திரன்
எம். கணபதி
அ. மீனாட்சிசுந்தரம்
எஸ். கே. பாலகுருநாதன்
அ. தேவராசன்

திருப்பரங்குன்றம்

கே. பி. பாண்டியன்
எம். எஸ். முத்தையா
க. மு. மலையாண்டி
வி. ராமசாமி
ச. இப்ராகிம்
பா. க. கருப்பண்ணன்
பி. வெ. ஆசைத்தம்பி
மீ. மாணிக்கம்
ச. தொ. ஆறுமுகம்
பா. மாணிக்கம்
பா. குருசாமி
சு. பா. சுப்பிரமணியன்
ரா. பொ. கருணாகரன்
ஆ. பொன்னையன்
எ. கே. ஆண்டியப்பன்
சி. பி. வி. அம்பலம்

கிழக்கு மதுரை

ச. வேலாயுதம்
எஸ். செல்லமாணிக்கம்
ஆர். பாண்டிஅரசு
டி. கணபதி
ச. மீனாட்சிசுந்தரம்
அ. சி. குருசாமி
எஸ். முகமது
சி. முனியாசன்
வி. பழனிச்சாமி

மதுரைப்பாலம்

டி. வெங்கிடாசலம்
ஆர். சக்திவேல்
ப. வெங்கிடாசலம்
செளக்கத்அலி
கி. சுப்பிரமணியம்
எல். ராஜாராம்
மாயாண்டி

கிலைமான்

எம். ஆர். கணேசன்
பாலகிருஷ்ணன்
ஆல்பாட்
பேச்சிமுத்து
எஸ். ராசு
ஜி. பாண்டியன்

வெளிவந்துவிட்டது!

புத்தகப் பூங்காவில் புரட்சி மணம் வீசும் ஓர் புதுமை மலர்!

எழிலும் இனிமையும் நிறைந்த ஏடு!

"அண்ணாதுரை"

பிரபல எழுத்தாளர்;
பி. வி. ராமசாமி
தீட்டியது

விலை ரூபாய் ஒன்று

கழிவு 25% அனுப்பும் செலவு இனாம்.

கருணாநிதி பதிப்பகம்
சென்னை-2.

# நாடெங்கும் தி. மு. க. தீரர்களின் பட்டாளம்

எம். கிருஷ்ணன்
கே. பழனிச்சாமி
மா. சி. துரைராசு

கம்மனூர்
ஏழுமலை
மு. மணிமுத்து
வி. ராசு
பரமசிவம்

கொடைக்கானல்ரோட்
இ. சாத்தான்
எஸ். செயதுஇப்ராகிம்
எ. கோயில்பிள்ளை
சி. பெருமாள்
ஈஸ்வரவடிவேல்
எஸ். நடராசன்
அய்யாத்துரை
பெருமாள்
முனியாண்டி
முத்துசாமி

மதுராந்தகம் வட்ட தி. மு. கழகச் சார்பில் 'இந்தி'யைக் கீழ்க்கண்ட இடங்களில் தோழர்கள் அழித்தார்கள். அதன் விபரம்:

மதுராந்தகம்
பி. சிவானந்தம்
கிருஷ்ணமூர்த்தி
கோபால்
கோபாலகிருட்டினன்
ஆறுமுகம்
குப்புச்சாமி

கருங்குழி
எம். கே. முஸ்தபா
பாலு
என். சபாபதி
பலராமன்

பட்டாளம்
சி. சுதர்சனம்
திருஞானம்
மதுரைராசன்

களத்தூர் (கைதும் விடுதலையும்!)
எஸ். சாமிநாதன்
சுப்ரமணியம்

இருவரும் கைது செய்யப்பட்டு இரவு பத்து மணிக்கு விடுவிக்கப் பட்டார்கள்.

பாக்கம்
எம். ஜி. கே. சாமி
ஆதிசிவபாதம்
கதிர்வேல்
கிருட்டினன்

அச்சரபாக்கம்
சி. வி. ரத்தினவேல்
வி. நடராசன்
சதாசிவம்
ஆறுமுகம்
சின்னப்பா

தொழுப்பேடு
வி. கே. ஏழுமலை
கண்ணன்
ராஜகோபால்

கரசங்கால்
எம். ஜி. வேணுகோபால்
சிதம்பரம்

சோத்துப்பாக்கம்
எம். கே. லோகநாதன்

வார்க்கால்பட்டு: (கைது விடுதலை)

அறப்போரில் பங்கேற்ற தி. மு. க. தோழர்கள்:
ஆர். கோவிந்தசாமி


**தீப்பொறி**

ஆசிரியர்
சி. பி. சிற்றரசு

ஆகஸ்டு 22ந் தேதி வெளிவருகிறது. எல்லா ஏஜண்டுத் தோழர்களும் உடனே பதிவு செய்து கொள்ளவும்.

நிர்வாகி : : தீப்பொறி
தபால் பெட்டி. நெ. 316
திருச்சி


என். மாரிமுத்து
என். கோவிந்தசாமி

இம் மூன்று பேரையும் போலீசார் கைதுசெய்து பிறகு விடுதலை செய்தார்கள்.

வைத்தீஸ்வரன் கோவில்

தி. மு. க. அறப்போர் வீரர்கள்:
வி. லெட்சுமணன்
இரா. கோவிந்தராசன்
த. ராமசாமி
சி. ஜெகன்னுதன்

அஞ்சல் நிலையத்திற்கு 'இந்தி'யை அழிக்கச் செல்லும்போது போஸ்ட் மாஸ்டரே போர்டை எடுத்துவிட்டார்.

செம்பனார்கோவில்

மேலபக்கம் தி. மு. க-வும் கீழ்பக்கம் தி. க. தோழர்கள் நால்வருமாக இந்தியை அழித்தனர். அஞ்சலகத்தில், போஸ்டுமாஸ்டரே, இந்தி போர்டை எடுத்துவிட்டார். அறப்போரில் ஈடுபட்ட தி. மு. க தோழர்கள்:
டி. பி. ஆறுமுகம்
எஸ். பி. துரைஅரசன்
எஸ். ரெத்தினம்
செல்லையன்
கலியபெருமாள்

மன்னம்பந்தல்

ஆறுபாதிவிளாகர் தி. மு. கழகச் சார்பில் புகைவண்டி நிலையத்தில் இந்தியை அழித்தோர்:
கே. ராமச்சந்திரன்
மு. கோவிந்தசாமி
மா. ராமு
எ. கிருஷ்ணமூர்த்தி
நாதன்
ஆர். சவுரி
ஆர். கிருஷ்ணமூர்த்தி

ஆம்பூர்

ஆகஸ்டு அறப்போரில் கலந்து கொண்ட தி. மு. கவினர்:
எ. ஜி. சாமி
ஆர். சம்பங்கி
இராமலிங்கம்
ஆர். பி. சாரதி
டி. செல்வம்
கே. ராமசந்திரன்
முருகேசன்
சக்கரவர்த்தி
குப்பன்
கோவிந்தன்
ஆர். திருநாவுக்கரசு
ஜி. அரசு
கே. எஸ். எஸ். ஆனந்தம்
எம். செயராமன்
டி. சண்முகம்
கே. சி. ராமானுசம்
எஸ் சுப்ரமணி

புள்ளம்பாடி
வெ. ந. ரெங்கராசன்
இராவணன்
ஏ. கே. பெருமாள்

திருக்காட்டுப்பள்ளி

அஞ்சலக போர்டிலிருந்த இந்தியை திருச்சினம்பூண்டி தி. மு. க. தோழர்கள் அழித்தார்கள் :
கோ. ராமசாமி
இரா. அப்பாவு
சுப்பிரமணியன்
ப. கலியபெருமாள்
தே. பச்சிராசு
சாமி அய்யா
இராசகோபல்
ஆதிமூலம்

மன்னார்குடி

ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களையும் அஞ்சல் நிலைய இந்தி எழுத்துக்களையும் அழித்த தி. மு. க. அறப்போர் வீரர்கள் :
ப. நாராயணசாமி
இர. கணேசன்
கே. நாகராசன்
எ. விசுவநாதன்

எம். பி. சக்கிரியா
எ. எ. அனீப்
பி. கோவிந்தராசன்
எம். ஆர். சண்முகம்
கி. தம்பிதுரை
வி. சிவராஜ்
கே. பொன்னுசாமி
ஜி. ராமசாமி
பி. மகாலிங்கம்
உத்ராபதி
சிவகுருநாதன்
இலரா

பேரளம்

அறப் போர்க் களத்திலே ஈடுபட்டு ரயில்வே நிலயத்திலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்த வீரர்கள்:
பி. எஸ். இளங்கோ
ஒளி
பக்கிரிசாமி
அழகிரி

தென்காசி, புலியூர்

ரயில்வே நிலையத்திலுள்ள இந்தி எழுத்துக்களை புல்லுக்கட்டுவலசைத் தோழர்களும் தென்காசித் தோழர்களும் அழித்தனர். அவர்கள்:
மாரியப்பா
திராவிடத்துரை
கண்ணன்
வி. வேலு
எ. லிங்கம்

மேட்டுப்பாளையம்
கவுந்தப்பாடி
சலங்கபாளையம்

இவ்வூர்களின் அஞ்சல் நிலையத்திலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. வீரர்கள்:
எம். பி. முத்துசாமி—மேட்டுப்பாளையம்
பி. கிருட்டினன் ,,
பாட்டையன் ,,
இரா. துரை கவுந்தப்பாடி
கே. எம். சென்ருயன் ,,
கே. பி. ரங்கசாமி ,,
எஸ். சுப்பிரமணியம் ,,
எம். நஞ்சப்பன்
கே. ஷண்முகம்
சுப்பிரமணியம் சலங்கபாளையம்

பொள்ளாச்சி

இங்குள்ள இரு அஞ்சல் நிலையங்களிலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. தோழர்கள்
கு. ந. கிருட்டிணசாமி
அன்புச்செழியன்
வெ. பழனியம்மாள்
புரட்சிமணி
ஜி. என். ராசு—கோபி

கோவில்பாளையம்

ரயில் நிலையத்திலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. தீரர்கள்:
க. சின்னத்துரை
மா. பொன்மலை
அ. வெ. சுந்தரம்
முஸ்தபா

நல்லட்டிபாளையம்
தூயமணி
பழனியப்பன்

திப்பம்பட்டி
இரா. பண்டியன்
எ. எஸ். கண்ணன்
மு. தேவராசன்
சி. சிவராசு

பூலாங்கிணறு
நடராசு
க. வேலாயுதம்
சிவராமன்
வெள்ளிங்கிரி

ஆனைமலைரோடு
தி. சதாசிவம்
தி. ராமசாமி
சங்கரலிங்கம்
குப்புசாமி

## வடக்கில் தமிழ் எழுதப்படுமா?

### இந்தி ஆதிக்கம் பற்றி 'பேபி'

### பதில் தர 'டில்லி' தர்பார் மறுப்பு

1. (அ) இந்திய மக்களில் இந்தி பேசுவோர் எவ்வளவு பேர்? இந்தி பேசாதவர்கள் தொகை என்ன?

(ஆ) நாட்டின் பொது மொழியாக இந்தியைத் தெரிந்தெடுத்ததற்குக் காரணங்கள் என்ன?

(இ) இந்தி மொழியில் இருக்கும் அறிவு வளர்ச்சி நூல்கள் என்னென்ன?

(2) தென்மண்டல ரயில் வேக்களில் இந்தியில் பெயர்ப் பலகைகள் எழுதுவதற்கு என்ன செலவாயிற்று?

(ஆ) இந்த வேலை தொடங்கியதன் அவசியம் என்ன?

(இ) வடமண்டலம், மத்திய இந்தியா ஆகிய ரயில்வேக்களில் தமிழ் எழுத்தில் பெயர்ப் பலகைகள் எழுதப்படுமா?

(3) (அ) 1951-52-ம் ஆண்டுகளில் I. A. S., I. P. S. தேர்வுகளுக்கு எத்தனைபேர் விண்ணப்பம் செய்து கொண்டார்கள்?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள்?

(இ) அத்தேர்வுகளுக்கு விண்ணப்பம் செய்யும் அபேட்சகர்களுக்கு இந்தி மொழி தெரிந்திருக்க வேண்டுமென்பது உண்மையா? I. A. S. வேலைகளுக்கு இத்தகைய தனி யோக்கியதாம்சம் தேவையா?

*

திருச்செங்கோட்டுத் தொகுதி தீரர் பேபி கந்தசாமி கடந்த 31-7-52ல் டில்லிபார்லிமெண்டில் இந்தக் கேள்விகளைக் கேட்க அனுப்பியிருந்தார். ஆனால், சபைத் தலைவர் இவைகளைக் கூடாதென நிராகரித்துவிட்டார்! எப்படியிருக்கிறது டில்லி, பாருங்கள்! இந்தக் கேள்விகள் நியாயமற்றவை யென்று கூறமுடியுமா?

இராமநாதபுரம்

தோழர் முகவை இரா. சௌந்திரபாண்டியன் தலைமையில் இந்நகர் தி.மு.க. தோழர்கள் இராமநாதபுரம், சத்திரக்குடி, வாலாந்தரவை, உச்சிப்புளி, மண்டபம், மண்டபம் ஆகிய புகைவண்டி நிலையங்களில் இருந்த இந்தி எழுத்துக்களை அழித்தனர்.

ரவணசமுத்திரம், ஆழ்வார்குறிச்சி

ரயில்வே நிலையங்களில் இருந்த இந்தி எழுத்துக்களை பொட்டல் புதூர் தி. மு. க. தோழர்கள் அழித்தனர். அவர்கள்:
எம். அகமது
ஒ. எ. முகம்மது
கே. என். முகம்மதுமைதீன்
கே. எம். முகம்மது
நெய்னுமுகம்மது
எம். எஸ். கனி
எஸ். காதர்மைதீன்

மீனாட்சிபுரம்
ஆ. சு. வெங்கடாசலம் ஆனைமலை
எ. வி. எம். சாமி ,,
அரிராம் ,,
அப்துல்ரகீம் ,,

# தாய்மொழி காத்த தியாகச் செம்மல்கள்

### ஒரு சந்தேகம்!

''இந்தி எழுத்து அழிப்புக் கிளர்ச்சிக்கு எதிர்ப்பாக இருப்ப தாகவும் கூறினர்''

*

தியாகராய நகரில் கடந்த 4-ந் தேதிய பேசிய தோழர் அஜாய் குமார்கோஷ் இவ்விதம் வெளியிட்டதாக ''இந்து'' இதழ் பிரசுரித்திருக்கிறது. தோழர் அஜாய் குமார், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுக் காரியதரிசி. அவர், இவ்விதம் வெளியிட்டிருக்கிறார். ஆனல், இங்குள்ள நமது கம்யூனிஸ்டு நண்பர்களோ..........!?

கொடைரோடு

ரயில்வே நிலையப் பெயர்ப்பலகையிலுள்ள இந்தி எழுத்துக்களை சித்தையன் கோட்டைத் தி. மு. க. தோழர்கள் அழித்தார்கள். அவர்கள்:

சி. இருளப்பன்
எம். ஏ. சாகுல்அமீது
இர. பொன்னன்
ஆர். வி. முருகன்
எஸ். எம். காசிம்
டி. காளிநாதன்
என். அப்துல்காதர்
தம்பிரான்
ரோஸ்வீரணன்
ஜி. மணி
வெள்ளையன்
அபூபக்கர்
சு. ம. கணேசன்

பாண்டிக்கண்மாய்

இவ்வூர் ரயில்வே நிலைய இந்திப் பெயரை அழித்த தி. மு. க. தோழர்கள்:

எஸ். கார்த்திகேயன் — நயினர்கோவில்
வி. செல்வராஜபாண்டியன் — இளங்காக்கூர்
ஏ. எஸ். சண்முகம் — கருத்தனந்தல்.

வையம்பட்டி

ரயில்வே நிலைய இந்தி எழுத்தை அழித்த தி. மு. க. அறப்போர் வீரர்கள்:

ரா. நடராசன்

பொன்னேரி

ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த தோழர்கள்.

வே. சோமசுந்தரம்
இ. ராமலிங்கம்

கடம்பூர்

அறப்போரில் கலந்துகொண்டு ரயில்வே நிலைய இந்திஎழுத்துக்களை அழித்த தி. மு. க. தோழர்கள்.

பா. க. செல்லையா
இரா. குருசாமி
பெ. பரமசிவன்
மு. அருணசலம்
ச. முத்துமாரியப்பன்

இளவேலங்கால்

ஆகஸ்ட்போரில் கலந்துகொண்ட தி. மு. க. வீரர்கள்:

எம். எஸ். பி. சாமி
ஆ. தங்கவேல்
பெ. மு. நடராசன்

மணியாச்சி (சந்திப்பு)

இங்கும் இந்தி எழுத்துக்கள் அழிக்கப்பட்டன. அழித்த தோழர்கள்:

அ. அருணசலம்
மு. தாளமுத்து
ச. பாக்கியம்
ம. நாராயணன்
வே. கனகரத்தினம்
இரா. முத்துமாலை
பெ. மு. செல்லம்
நாணரக்கினர்
மு. அ. நடராசன்
என். சி. குமரன்
எஸ். பாண்டியன்
பி. ஆத்தியப்பன்
ந. காளியப்பன்
சி. செல்லக்கனி

நெடும்பலம்

புகைவண்டி நிலையத்திலிருந்து இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. அறப்போர் வீரர்கள்:

டி. எஸ். கல்யாணசுந்தரம்
செ. தங்கவேல்
பி. கோபாலகிருட்டிணன்
எஸ். கருப்பையன்
வி மாரிமுத்து
எம். நடேசன்

கல்லிடைக்குறிச்சி

ரயில்வே நிலையத்தில் நடைபெற்ற அறப்போரில் கலந்து கொண்ட தி. மு. க. தோழர்கள்:

வி. எம். ரெங்கசாமி
கே. எஸ். சுப்ரமணியம்
கே. கே. பாலன்
கே. எம். மைதீன்
என். மூக்கன்
ஆர். ஆறுமுகம்

தட்டப்பாரை
மீளாவிட்டான்
கைலாசபுரம்
பாண்டியாபுரம்

இந்த இடங்களிலிருந்த இந்திப் பெயர்கள் அழிக்கப்பட்டன. 82வயது தொண்டுக் கிழவர் தேவான் ஞான திரவியமும் இந்தியை அழித்தார்.

பறங்கிப்பேட்டை

அறப்போரில் பங்கு கொண்ட தி. மு. க. தோழர்கள்:

த. சம்பந்தமூர்த்தி
சா. கி. சாமி
பெ. ராமசந்திரன்
கோ. ஜெயராமன்
கு கலியன்

சின்னளப்பட்டி

இங்குள்ள இரயில்வே நிலைய இந்தி எழுத்துக்கள் தார்பூசி அழிக்கப் பட்டன. இதில் தி. மு. க. தோழர்களும் தி. க. தோழர்களும் கலந்து பணியாற்றினர். அவர்களில் தி. மு க. தோழர்கள்:

எஸ் சேதுபதி
பி. திருஞானசம்பந்தம்
பி. எ. மதுசூதனன்
ஆர். நடராசன்
நா. ஞானநத்தம்
கு. ஜெயராமன்
கே. எஸ். எஸ். எஸ். மணி
கே. வெள்ளைச்சாமி
எம். எஸ். கருப்பையா
எம். எஸ் சுபபையா
ச. முத்துகிருஷ்ணன்
பி முருகேசன்
பு. சன்ராஜ்
எஸ். எஸ். நாராயணன்
மொ. சுப்பிரமணி
பொ. சுப்பிரமணி
பொ. ராமசாமி
ச. ஆறுமுகம்
ஆ. க. கருப்பையா
பி. கிருஷ்ணசாமி
டி. ஜி. ரத்தினம் (பஞ்சம்பட்டி)
எம். கணேசன்
என். பி. ஆர். போழி செட்டியார்
எஸ். ஆர். பி. ராமசாமி
ஜி. சுந்தரமகாலிங்கம்
இரா. தனஅரசு
ப. பாலு
ரா. வெள்ளைபொன்னு
கோ. ராமநாதன்
மு. அபுகர்
க. துரை

தேவகோட்டைரோடு

இந்தி அழிந்தது. அழித்த தி. மு. க. தோழர்கள்:

இராம. வெள்ளையன்
உ. சீனிவாசன்
இதயமணி
கருப்பையா
முத்துராமலிங்கம்

வடக்கநத்தல்

இவ்வூர் அஞ்சல்நிலைய இந்திஎழுத்துக்கள் தார்பூசி அழிக்கப்பட்டது. அழித்த தி. மு. க. தோழர்கள்:

க. பெ. நெடுமாறன்
மாரியப்பன்
மருதைமுத்து
ராமசாமி
ஆறுமுகம்

மண்ணடி

அஞ்சலகத்தில் 'இந்தி' யை அழித்த வீரர்கள்:

தி. பா. தம்பிதுரை
நாஞ்சில் சேவியர்
அன்பில் அபுபக்கர்
கே. நடராசன்

சோழபுரம்

புகைவண்டி நிலையத்தில் முகவூர், சோழபுரம், கிருஷ்ணபுரம் தி. மு. க. தோழர்கள் 15 பேர் பாலகுரு தலைமையில் இந்தியை அழித்தார்கள்.

குல்லலக்குண்டு

அஞ்சலக இந்திப் போர்டு அழிக்கப்பட்டது. அறப்போரில் உள்ளூர், பள்ளப்பட்டி, கண்டப்ப கோட்டை முதலிய இடங்களிலிருந்து 26 தொண்டர்கள் பங்கேற்றனர்.

அயோத்யாப்பட்டணம்

இங்குள்ள அஞ்சலகத்திலும் மாசிநாயகன்பட்டி புகைவண்டி நிலையத்திலுமுள்ள இந்தியை தோழர்கள் இரா. மாணிக்கம், எஸ். ஏழுமலை ஆகியோர் அழித்தனர்.

நிலக்கோட்டை

அறப்போரிலீடுபட்டதோழர்கள்

சையது காசிம்
ச. நடராசன்
பெ. வடிவேல்
பொன்ராம்
தர்மராசன்
சௌந்தரராசன்
மணி
அப்துல்காதர்
சுப்பு
தேவதானப்பட்டித் தோழர்கள்:
முஸ்தப்பா
பா. சு. மணி
தி. க. தோழர் வ. நாராயணன்

இவர்கள் கோடைமேடு, சிறுக்குவார்பட்டி, நிலக்கோட்டை அஞ்சலகம் ஆகிய இடங்களில் இந்தியை அழித்தனர்.

களம்பூர்

ஆரணி ரோடு, ஒண்ணுபுரம், மாதிமங்கலம், சோதாம்பட்டு ஆகிய ஊர்களின் ரயில்வே நிலையத்திலிருந்த இந்திப் பெயர்களை அழித்ததில் பங்கெடுத்துக் கொண்ட இவ்வூர்த் தி. மு. க. தோழர்கள்:

எஸ். எம். அண்ணமலை
கே. என். சிவநேசன்
டி. ஜி. ரங்கநாதன்
டபுள்யூ. எஸ். சின்னகண்ணு
எ. கோவிந்தசாமி
கே. பி. துரைசாமி
ஆர். அண்ணமலை

வாலாஜாபேட்டை

புகைவண்டி நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த தி மு.க. வீரர்கள்

மா. வெ. அன்பெழிலன்
இரா. இரணியதாசன்
வா. சி. நாகரத்தினம்
நா. இராசகோபால்
சி. கனியப்பன்
ச. குமார்
மு. கண்ணன்
கே. கிருஷ்ணன்
சின்னபபா
மகமத் உசேன்
எம். பாப்ஜான்
இரா. பச்சையப்பன்
வா. பொன்னம்பலனர்
சி. ஏழுமலை வா. குப்புசாமி

காரைக்குடி

புகைவண்டி நிலையத்திலேயும், அஞ்சலகத்திலேயும் இந்திஅழிக்கப்பட்டது. அழித்த தி. மு. க. வீரர்கள்.

கவிஞர் கண்ணதாசன்
மகமதலி
தென்னரசு
சார்த்சமுத்து.

குளித்தலை

ரயிலடி இந்திப் பெயரும், அஞ்சலக இந்திப் பெயரும் தார் பூசி அழிக்கப்பட்டன. பங்கெடுத்துக் கொண்ட தி. மு. க. தோழர்கள்.

கே. ஆர். இராசா
தி. வீ. முத்துகிருஷ்ணன்
மா. ஆர்த்தநாரி
எஸ். கே. குருநாதன்
இரா. இராமச்சந்திரன்
ஆர் எல்லையன்
எஸ். பாட்சா
எம். கணேசன்
டி. ஆர். ஆர். செல்லன்

தூளூர்

ல. நஞ்சப்பதேவர்

உளுந்தூர்பேட்டை

ச. வசாப
முருகேசன்

குடியேற்றம்
மேல் ஆலத்தூர்
வளத்தூர்

இவ்வூர்களின் புகைவண்டி நிலையத்திலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. வீரர்கள்.

கு. சி. பொன்னுசாமி
தட்சணமூர்த்தி
ராமசாமி
ரகுபதி
ஆறுமுகம்
சின்னசாமி
அப்பாசாமி
டி. ராஜமாணிக்கம்

கணக்கன்பட்டி
மஞ்சள்நாய்க்கன்பட்டி

பழைய ஆலக்குடி, புது ஆலக்குடி ஊர்த் தோழர்கள் ரயிலடி இந்திப் பெயர்களை அழித்தார்கள் அவர்கள்.

வி. பழனிக்குமார்
அ. பொன்னுசாமி
சி. அன்பு பழம்
பொன்னையா
வீ. முத்து
எம். பொன்னையா
வி. சண்முகம்
ம. தங்கப்பன்

### திருப்பத்தூர் தாலுகா விவசாயிகள் சங்கம்

மேற்படி சங்க நிர்வாகக் குழு கூட்டம் ஆக 11ந் தேதி வாணியம்பாடி சண்முகம் நிலையத்தில் நடைபெறுமெனறும் பல அவசர விஷயங்கள் ஆலோசிக்க வேண்டியிருப்பதால் யாவரும் வருமாறும் காரியதரிசி வி என். தத்தப்பன் எழுதுகிறார்.

### வருந்துகிறோம்

29—7—52ல் தோழர் K. K. நீலமேகம் அவர்களின் தந்தையார் தமது 93-வது வயதில் இயற்கை எய்தினர் என்பதை அறிய மிகவும் வருந்துகிறோம். K. K. N. அவர்கட்கு நமது மனமார்ந்த ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# நாடு வாழ்த்திட நற்பணி புரிந்தோர்

வீரவநல்லூர்

நடராசன்
பரமசிவன்
அப்துல்காதர்

ஆனைமலை

அஞ்சலக இந்தியை அழித்த அறப்போர் வீரர்கள்.

ஏ. டி. துரைராசு
ஏ. எஸ். வேணு
ஏ. எல. ராமலிங்கம்

மீனாட்சிபுரம்

ஆனைமலைத் தோழர்கள் இங்கிருந்த இந்தி எழுத்துக்களை அழித்தனர். அவர்களை போலீசார் 3 மணி நேரம் காவலில் வைத்திருந்து பிறகு விடுவித்தனர். அவர்கள்.

எ. வி. எம். சாமி
எ. அப்துல்ரகீம்
எ. எஸ். வெங்கிடாசலம்
எ. எஸ். அரிராம்

சேரன்மாதேவி
காருகுறிச்சி
மேலக்கல்லூர்

ஆகிய ஊர்களின் புகைவண்டி நிலையத்திலிருந்த இந்திப் பெயர்களை அழித்த தி. மு. க. அறப்போர் வீரர்கள்:

ஏ. எஸ். சுப்பு—சேரன்மாதேவி
எஸ். எம். காதர் ,,
எம். பி. முகைதீன் ,,
எம். அனிபா ,,
எ. ராமையா ,,
துரை. இராசன் ,,
கே. புகாரி ,,
எம். முகம்மது ,,
கே. பரமசிவன் பத்தமடை
கே. பி. பக்கீர்பாவா ,,
நம்பி ,,
மங்களாபக்கீர் ,,

முகலிவாக்கம்

அஞ்சல் நிலைய இந்தி எழுத்தை அழித்த தி. மு. க. அறப்போர் வீரர்கள்:

பெ. சுந்தரமூர்த்தி
சி. அர்ஜுனன்
அ. பலராமன்
மு. கணேசன்
ந. சரவணன்

அறந்தாங்கி
இடையாறு
வால்றமாணிக்கம்
பெரியகோட்டை ரோட்
கண்டனூர்
புதுவயல்

முதலிய ஊர்களின் ரயிலடி இந்தி எழுத்துக்களையும், அறந்தாங்கி அஞ்சல், தந்தி நிலைய இந்தி எழுத்துக்களையும் அழித்தார்கள். இதில் தி. க. தோழர்களும் கலந்து கொண்டார்கள். அறப்போரில் ஈடுபட்ட தி. மு. க. தோழர்கள்:

ஓவியன்கண்ணு
எஸ். பந்தா
மு. வடிவேல்
இரா. சத்திவேல்
வ. பிச்சைக்கண்ணு

மட்டத்துக்குளம்

இங்குள்ள புகைவண்டி நிலைய இந்தி போர்டை கணியூர் தி. மு. க. தோழர்கள் அழித்தார்கள். அவர்கள்:

கே. எ. முருகேசன்
கே. கோபால்சாமி
எஸ். எ. உசனூர்

தல்லூர்

புகைவண்டி நிலைய இந்தி போர்டை ஆத்தூர் தி. மு. க. தோழர்கள் அழித்தனர். அவர்கள்:

கே. வி. பி. சாலமோன்
செ. மி. பெரியசாமி
சு. கலைச்செல்வன்
மா. க. நடேசன்

சாத்தூர்
வேப்பிலைபட்டி
நள்ளி
துலுக்கப்பட்டி

ஆகிய ஊர்களின் ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை தி. மு. க. தி. க. தோழர்கள் அழித்தார்கள். தி. மு. க. அறப்போர் வீரர்கள்:

ஜான்
ஜார்ஜ்
போகியார்
டாக்டர் ஆசீர்வாதம்
பெ. குருசாமி

தி. க. தோழர்கள்:

ராசாமணி
மைக்கேல்
மு. செல்வராசு
ஜே. எஸ். வெங்கடாசலபதி
சம்புலிங்கம்
எஸ். கரிகாலன்
கிருட்டினமூர்த்தி

பசுபதிகோவில்

கே எம். பாட்சா
டி. எம். மதார்சா
லப்பா
திருநாவுக்கரசு
ஹாபுல்

பெத்தநாய்க்கன்பாளையம்

இங்குள்ள புகைவண்டி நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த நம் தோழர்கள்

ஐ. எஸ். அன்பழகன்
துரைசாமி
என். சின்னு

கல்பகனூர்

ஆர். மகாலிங்கம்
கே. கோவிந்தன்

ஆத்தூர்

இந்தி எழுத்துக்களை அழித்த அறப்போர் தி. மு. க. வீரர்கள்:

எ. எம. அங்கமுத்து
கே. அங்கமுத்து
எஸ். சின்னு
ஆர். எஸ். மணி

காட்டுக்கோட்டை

கே. எஸ். மணி
பொன்னுசாமி

சார்வாய்

கே. ஆறுமுகம்
சி. தங்கராசு

தலைவாசல்

டி. ஆர். மாரியப்பா
எ. இராமசாமி

ஆனையாம்பட்டி

அஞ்சல் நிலைய இந்தியை அழித்த அறபோரினர்:

டி. ஆர். மாரியப்பா
என். எ. பெரியசாமி

ஓதியத்தூர்

அஞ்சல் நிலைய இந்தியை அழித்த தி. மு. க. தோழர்கள்:

தங்கராசு
சின்னு

ஒட்சல்பட்டி

அஞ்சலக இந்தி அழிக்கப்பட்டது தாரால்! அழித்த தி. மு. க. வீரர்கள்:

ரா. அருணசலம்—கடத்தூர்
தா. நாகபபன்
ரா. பொன்னுசாமி

புட்டிரெட்டிபட்டி
பொம்மிடி
லோகூர்

இவ்வூர்களின் புகைவண்டி நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த அறப்போர் வீரர்கள்:

ராசா
கா. ரா. காளிமுத்து
மா. தேசோமயம்
மாரியப்பன்
அப்துல்லா
நஞ்சப்பன்
அண்ணமலை
பங்காரு
நடராசன்
மூக்கா செட்டி
கண்ணன்
வஜ்ஜிரம்
திருப்புளி
எ. ஆர். தங்கவேலு
எம். கிருட்டிணன்

திருநெல்வேலி சந்திப்பு

புகைவண்டி நிலையம், அஞ்சலகம், டெலிபோன் எக்சேஞ் அலுவலகம் முதலிய இடங்களிலிருந்த இந்தி எழுத்துக்களை தார்பூசி அழித்த தி. மு. க. தோழர்கள்:

ச. வீரபாகு
சு. சுப்பிரமணியன்
மா. சண்முகம்
சு. இராமச்சந்திரன்
எஸ். எம். மொன்னுமுகம்மது
ரா. தாமஸ்
வி. கே. முகையதீன்
செ. கா. யூசுப்
எ. எம். ஒய். உசேன்
ரகமத்துல்லா
திருப்பாற்கடல்
சுப்பையா
சிதம்பரனார்
அருணசலம்
இளசு. இராமச்சந்திரன்
சுப்பராயலு

திருத்தங்கல்

ரயில் நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. தோழர்கள்:

எ. எஸ். கனி
எம். சேர்சக்கனி
என். ராமநாதன்

சிவகாசி

திருத்தங்கல் தி. மு. க. தோழர்கள் புகைவண்டி நிலைய இந்தி எழுத்துக்களை அழித்தனர்:

எஸ். முத்தையா
எம். பி. காளியப்பன்
எம். பாக்கியராசா
வி. ஆறுமுகச்சாமி

சிவகாசித் தி. மு. க., தி. க. தோழர்களும் கலந்து கொண்டனர்

கொளத்தூர் (கைது)

அஞ்சலக இந்தியை தாரால் அழித்தனர். பிறகு குரும்பனூர், ஐயம்புதூர் ஆகிய ஊர்களில் அஞ்சலக இந்தி போர்டை அழிக்கச் சென்றபோது கைது செய்யப்பட்ட தி. மு. கழகத் தோழர்கள்:

கே. குருசாமி
ஜி. நடராசன்
எம். பெருமாள்

வளவனூர்

இரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. வீரர்கள்:

நா. நாமதேவன்
ஆப. சாமி
சு. கோவிந்தசாமி
மா. பழனிசாமி
மா. நாராயணசாமி

தி. க. தோழர்:

க. பழனியப்பன்

சென்னிமலை

கே. இரத்தினம்
எம். கிருஷ்ணன்
தவர்கள்:
பாலசுப்பிரமணியம்
எ. அர்த்தநாரி
எ. எஸ். சாமி
எல். நாச்சிமுத்து
கே. இராவணன்

(தொடரும்)

## ‘கோபி’யில் வழக்கு!

கோபிச்செட்டிப்பாளையத்தில் ‘இந்தி’ அழிப்புப் போரில் ஈடுபடச் சென்ற கழகத தோழர்கள் 13 பேர்மீதும் ஆகஸ்டு 2ந்தேதி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணை துவங்கியது. இ. பி. கோ. 143–426–511 செக்ஷன்களின்படி நீங்கள் குற்றவாளிகளா? என்று மாஜிஸ்டிரேட் கேட்டார். ‘இல்லை’ என்று தோழர்கள் பதில் தந்தனர். மாஜிஸ்டிரேட் 6ந் தேதிக்கு வழக்கை வாய்தா போட்டுள்ளார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் 13 தோழர்களில் (விவரம் கடந்த வாரம் வந்துள்ளது) ஒருவரான டி.என் மாரியப்பன், 1938ல் இந்தி எதிர்ப்பில் சர்வாதிகாரியாக இருந்து சிறை சென்றவர்களாவார்கள். (நிருபர்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதாக. இப்போது ஆச்சாரியாரது ‘ஆலாபனம்’ ஆரம்பம்! அவர்கள் இருந்த ‘பீடத்தில்’ இவர் இருப்பதால்!! இதனால், உண்மை விளங்குகிறதே, எவர் சென்னையில் அதிகாரத்துக்கு வந்தாலும் இதே கதிதான் என்று. இந்த உண்மையைத் தோழர்கள் உணரவேண்டுகிறோம்.

ஆச்சாரியார், இத்தகைய கருத்துக்களை அறிவிப்பது, இன்று அவரே நெருக்கடியால் தாக்கப்பட்டதன் விளைவுதானாகும்.

இந்த நெருக்கடி எதுவுமின்றி, நமது தாயகம், சுகமாக வாழ வேண்டுமென்றால், டில்லியின் தொடர்பு துண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் நல்வாழ்வு மலரமுடியும்!

மித்திரனின் சித்திரத்தைக் கண்டபோது, நம் சிந்தனை ரதம் ஓடியதோடுகூட, சிரிப்பும் வந்தது நமக்கு. பசுவுக்குத் தீனிவைக்கிறார் ஒருவர்! ஆனால் பாலை; வேறு சிலர் கறக்கிறார்கள்!! இந்தக் ‘கொள்ளை’யைக் கண்டதும், “அட! திருட்டுப் பசங்களே. தீனிவைப்பது நான். மாடு என்னுடையது. நீங்களா பாலைக் கறக்கிறீர்கள்” என்று, ஆத்திரத்தோடு, கேட்கவில்லை — பாயவில்லை—தீனிவைப்பவர். உட்கார்ந்தபடியே பரிதாபத்தோடு கேட்கிறார் — திருடர்களை: “எனக்குக்கூட கொஞ்சம் பங்கு கொடப்பா!” என்று. மித்திரன், இந்த வார்த்தைகளை, தீனிவைக்கும் ஆச்சாரியார் கூறுவதுபோல, அச்சிட்டுள்ளது. மாடு நமது! காத்துவளர்ப்பது நமது சர்க்கார்!! கறந்து செல்வதோ திருடர்கள். அத் திருடர்களிடம் போய் பங்கா கேட்பர், எவரும்! கையில் கிடைத்ததைக்கொண்டு திருடரை விரட்டிவிட்டு, பாலைக் கறந்து புசிப்பர். ஆனால், ‘மித்திரன்’ பங்கு கேட்கிறது! மித்திரன் மட்டுமா, அது சார்ந்திருக்கும் தேசியத் தலைவர்களே (ஆச்சாரியார் உள்பட) டில்லியிடம் பங்குதானே கேட்கின்றனர். கேலிக்குரியதாகத் தோன்றவில்லையா, இது! நாம் கேட்பது, பங்கு அல்ல; முழுபால். திருடனுக்கு பாலைக்கறக்கச் சொல்லிவிட்டு, பங்கு கேட்கும் காரியத்தில் இறங்குவது கோழைத்தனமன்றோ? ஆனாலும் பரவாயில்லை! திருட்டுப் போவதேதெரியாதுஇருந்தோர்க்கு ‘பங்கு’ கேட்கும் பக்குவம் இப்போதுதானேவந்துள்ளது. போகப்போக தூக்கம் கலையும்! துணிவும் பிறக்கும்!! திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கமும் அவர்தம் உதடுகளில் ஒலிக்கும்!!! ✱

Edited Printed & Published by C. N. Annadurai M. A, at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.